23.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு



மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக பாலாறு, கோட்டையூர், செட்டிப்பட்டி உள்ளிட்ட மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 622 கன அடியாக இருந்தது. இது புதன்கிழமை காலை நொடிக்கு 1,756 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,200 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைக்கு வரும் நீரின் அளவைவிட குடிநீர்த் தேவைக்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால்,

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 42.23 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 13.26 டி.எம்.சி. அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

## கரும்பில் சுடுமல்லி ஒட்டுண்ணி நோய் மேலாண்மை!



தருமபுரி: கரும்பின் வேர்ப் பகுதியைச் சுற்றி வளரக் கூடிய சுடுமல்லி எனும் ஒட்டுண்ணி களையானது கரும்பு சாகுபடியை வெகுவாகப் பாதிக்கும். இதைக் கட்டுப்படுத்தி நல்ல மகசூல் பெற பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலைய முனைவர்கள் ம.சங்கீதா, பா.ச.சண்முகம் ஆகியோர் கூறும் வழிமுறைகள்:

கரும்புப் பயிரின் வேர்ப் பகுதியைச் சுற்றி வளரக்கூடிய ஒட்டுண்ணி களை என்பது சுடுமல்லி ஆகும். இந்த களைச் செடியானது தனக்கு தேவையான நீர் மற்றும் ஊட்டச் சத்துகளை பயிர்களிலிருந்து பெற்றுக்கொண்டு வளரும். இந்த களைச் செடியின் விதைகள் கரும்பு நடவு செய்த 10 நாள்களுக்குப் பிறகு கரும்பு பயிர்களின் வேர்களிலிருந்து வெளிப்படக் கூடிய வேதிப்பொருளின் தூண்டுதலால் முளைக்க ஆரம்பிக்கும்.

இவற்றின் விதைகள் மண்ணில் 40 செ.மீ. ஆழத்தில் முளைத்து, மண்ணுக்கு அடியில் தண்டு மற்றும் வேர்ப்பகுதிகளை உருவாக்கும். இந்த செடியானது 3-7 நாள்கள் வரை தனித்து வளரும். இதன் தண்டுப் பகுதியிலிருந்து ஹாஸ்டோரியா எனும் குழாய் போன்ற அமைப்பை உருவாக்கி, பயிரின் வேர்ப் பகுதிக்குள் ஊடுருவி வளர ஆரம்பிக்கும். இவை கரும்புப் பயிரிலிருந்து நீர் மற்றும் ஊட்டச் சத்துகளை உறிஞ்சிக் கொண்டு வளரும். இந்த ஒட்டுண்ணிக் களையானது மண்ணின் அடிப்பாகத்தில் 4-8 வாரங்கள் வரை வளர்ந்து, பின்பு மண்ணின் மேற்பகுதியில் சிறிய பச்சை நிற இலைகளைத் தோற்றுவிக்கும். பிறகு இவை சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் பூக்களைத் தோற்றுவித்து, செடிக்கு 1-15 விதைகளை உருவாக்கும். இந்த விதைகள் அளவில் மிகச் சிறியதாக இருக்கும். எனவே, நீர், காற்று மற்றும் மனிதர்கள் வாயிலாக எளிதில் மற்ற இடங்களுக்குப் பரவும். இவற்றின் விதைகள் மண்ணில் 10-15 ஆண்டுகள் வரை நல்ல முளைப்புத் திறனுடன் இருக்கும்.

கரும்பில் இந்த ஒட்டுண்ணி களையின் பாதிப்பு கரும்பு பயிர் பாதிக்கப்பட்ட பின்பு, அதாவது களை முளைத்து 4-8 வாரங்களுக்குப் பிறகுதான் வேர்ப்பகுதியைச் சுற்றி தெரியவரும். அவ்வாறு, தெரியவரும்போது, அவை பயிரில் பாதிப்பை ஏற்படுத்தி பயிரில் மகசூல் இழப்பை ஏற்படுத்திவிடும்.

இந்தக் களையானது நீர் மற்றும் ஊட்டச் சத்துகளை பயிர்களிலிருந்து பெற்றுக் கொள்வதால், கரும்பின் வளர்ச்சி குறைந்து, பழுப்பு நிறமடைந்து, காய்ந்து விடும்.

இந்த அறிகுறிகள் பயிர்களில் தென்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் வறட்சி பாதிப்பினால் ஏற்படும் அறிகுறிகள் போன்று காட்சியளிக்கும்.

கரும்பில் சுடுமல்லியின் பாதிப்பால் 20-70 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த ஒட்டுண்ணிக் களையானது சோளம், மக்காச்சோளம் மற்றும் நெல் ஆகிய தானியப் பயிர்களில் அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்போது இந்த ஒட்டுண்ணி களைச்செடியின் பாதிப்பு தருமபுரி மாவட்டத்தில் பரவலாகத் தென்படுகிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்: சுடுமல்லி ஒட்டுண்ணி களை வகையைச் சார்ந்தது. கரும்பில் இதன் பாதிப்பினை முற்றிலுமாக அகற்ற இயலாது. ஆகையால், களைகளின் எண்ணிக்கையும் பாதிப்பையும் குறைக்க இயந்திர, ரசாயன மற்றும் உயிரியல் முறை ஆகியவை இணைந்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் ஆகும்.

கரும்பு நடவு செய்யும்போது நல்ல சுத்தமான சுடுமல்லி பாதிக்காத வயல்களிலிருந்து விதை (அ) விதைக்கரணைகளைச் சேகரித்து உபயோகிக்க வேண்டும்.

வயல்வெளியை களைகள் இல்லாமல் கைக்களை (அ) இயந்திரங்களைக் கொண்டு களை எடுத்து சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.

சுடுமல்லி களையானது விதைகள் மூலம் பெருக்கம் அடையக் கூடியது. எனவே, பூ பூப்பதற்கு முன்பு கையினால் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். தாமதப்படுத்தும்போது, அதாவது பூ பூத்த 2-3 வாரங்களில் விதைகள் உருவாகிவிடும். அந்த தருணத்தில் விதைகள் செடியிலிருந்து மண்ணில் விழாதவாறு பிடுங்கி எடுத்துவிட வேண்டும். இவ்வாறு, செய்வதன் மூலம் அடுத்து சாகுபடி செய்யக்கூடிய பயிர்களில் இந்த களைச் செடிகளின் எண்ணிக்கை மற்றும் பாதிப்பு குறைந்துவிடும்.

இந்த ஒட்டுண்ணிக் களைச் செடியை கையினால் நீக்கும்போது மீண்டும், மீண்டும் அதிகளவில் தூர்களுடன் வளர்ந்துகொண்டே இருக்கும். எனவே, இதற்கு பதிலாக 2, 4, டி சோடியம் உப்பு என்ற களை முளைத்த பின்பு இடும் களைகொல்லியை லிட்டருக்கு 5 கிராம் என்றளவில் செடிகளின், மீது நன்றாகப் படும்படி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் களைகளின் மேற்பக்க வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, விதை உற்பத்தியைத் தடைபடுத்துவதன் மூலம் களைகளின் எண்ணிக்கை மற்றும் பாதிப்பை கரும்பு மற்றும் அடுத்து சாகுபடி செய்யக்கூடிய பயிர்களில் தடுக்கலாம்.

மண் வளம் குறைந்த நிலங்களில் குறிப்பாக தழைச்சத்து மற்றும் மணிச்சத்து குறைபாடுள்ள நிலங்கள் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட நிலங்களில் சுடுமல்லியின் பாதிப்பு அதிகம் தென்படும். எனவே, தொழு உரம், கம்போஸ்ட், தழைச்சத்தினை அளிக்கக்கூடிய ரசாயன உரங்கள் ஆகியவற்றை இட்டு மண் வளத்தை அதிகரித்து, பயிரின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் வாயிலாக சுடுமல்லியின் வளர்ச்சியை வெகுவாகக் குறைக்கலாம்.

தானியப் பயிர்களான நெல், கரும்பு, சோளம் மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களை தொடர்ந்து, சாகுபடி செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

பயிர் சுழற்சி முறையில் தட்டைப்பயிறு, நிலக்கடலை, சோயா பீன்ஸ் ஆகிய மண்ணில் தழைச்சத்தை நிலைநிறுத்தக் கூடிய பயறு வகைப் பயிர்கள் ஆகிய பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் சுடுமல்லியின் முளைப்புத் திறன் தடுக்கப்படுகிறது. மேலும், இவ் வகைப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்யும்போது சுடுமல்லியின் வளர்ச்சி தடைபடுகிறது.

பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு முன்பு சுடுமல்லி பாதிக்கப்பட்ட வயலில் அதன் முளைப்புத் திறனை ஊக்குவிக்கும் வேதிப்பொருளை உற்பத்தி செய்யக்கூடிய பயிர்களான சோளம், மக்காச்சோளம் மற்றும் நெல் ஆகியவற்றை சாகுபடி செய்து களைச் செடிகளை முளைக்க வைத்து பூ பூப்பதற்கு முன்பு மண்ணில் மடக்கி உழவு செய்து விட வேண்டும் (அ) அழித்து விட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் களைகளைக் கட்டுப்படுத்தி, நல்ல மகசூலைப் பெற முடியும் என்றனர்.

## நெல் சாகுபடியில் விதை நேர்த்தி



நெல் சாகுபடியில் விதை நேர்த்தி செய்து அதிக மகசூல் பெறலாம். இதுபற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இராஜா.ரமேஷ், ரெ.பாஸ்கரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விதை நேர்த்தியென்பது விதைகளின் முளைப்புத்திறனை அதிகரிக்கவும், பயிர்களை நோய் மற்றும் பூச்சித் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும் பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கவும் விதைக்கும் முன்பு விதைகளை ரசாயன பூஞ்சாண மற்றும் பூச்சிக்கொல்லிகள் அல்லது எதிர் உயிர் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாக்களைக் கொண்டு உயிர் உரங்களுடன் மேல் பூச்சு செய்வதே ஆகும்.

விதை நேர்த்தி செய்வதால் உண்டாகும் பயன்கள்: விதைகளின் முளைப்புத் திறன் அதிகரிக்கின்றது.

விதை மற்றும் மண் மூலம் பரவும் பூஞ்சாண நோய்களைக் கட்டுப்படுத்துகிறது.

பயிர்களின் நோய் எதிர்ப்புத்திறனை அதிகரிக்கச் செய்கிறது.

பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கிறது.

விதை நேர்த்தியில் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர்கள் மண்ணிலுள்ள கனிமப் பொருள்களைப் பயன்படுத்தி பல மடங்காகப் பெருகி செடிகளுக்கு நீண்ட காலப் பாதுகாப்பை தருகிறது.

உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்றவை பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்தையும், பாஸ்போ பாக்டீரியா மண்ணில் கிட்டாத நிலையில் உள்ள மணிச்சத்தையும் கிரகித்து பயிர்களுக்கு கிடைக்கும் வகையில் உதவி செய்கின்றன.

தரமான நெல் விதைகளைத் தேர்வு செய்யும் முறை: விதைகளின் முளைப்புத் திறனானது 80 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதற்கு சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். வயலில் அறுவடை செய்து விதைகளாகப் பயன்படுத்தும்போது, விதைகளை 1.2 சத உப்பு நீரில் (3 கிலோ கல் உப்பை 18 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும்) இட்டு உப்புக் கரைசலில் மிதக்கும் எடை குறைந்த தரமற்ற விதைகளை நீக்கிவிட்டு மூழ்கிய விதைகளை மட்டுமே நன்கு கழுவி விதைப்புக்குப் பயன்படுத்த வேண்டும்.

ரசாயனக்கொல்லி விதை நேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் கார்பென்டாசிம் என்ற பூஞ்சாணக்கொல்லி மருந்தைக் கலந்து 24 மணி நேரம் வைக்கவும். பின்பு உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் ஏக்கருக்குத் தேவையான விதைக்கு 200 கிராம் (ஒரு பொட்டலம்) மற்றும் பாஸ்போ பாக்டீரியா 200 கிராம் (ஒரு பொட்டலம்) ஆகியவற்றை 500 மி.லி. ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து விதைகளோடு கலக்கி நிழலில் உலர்த்தி பின்பு விதைப்பதற்கு பயன்படுத்தவும்.

உயிர் எதிர்க்கொல்லி விதை நேர்த்தி: உயிர் எதிர் பூசணக் கொல்லியான சூடோமோனஸ் புளுரோசன்ஸ் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து விதைகளை இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். அதை மறுநாள் காலையில் வடிகட்டி, விதைகளை ஈர சாக்கிலிட்டு நிழலில் உலர்த்தி பின்பு இருட்டு அறையில் வைத்திருந்து 3 முதல் 5 மி.மீ. வரை முளை கட்டவேண்டும்.

விதைப்பதற்கு முன்பு முளைக் கட்டிய விதைகளை ஒரு பாக்கெட் (200 கிராம்) அசோஸ்பைரில்லம், ஒரு பாக்கெட் (200 கிராம்) பாஸ்போ பாக்டீரியம் உயிர் உரத்துடன் நன்கு கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

நாற்றின் வேர்களை நனைத்தல்: ஒரு கிலோ சூடோமோனஸ் பாக்டீரியா கலவையை 10 சதுர மீட்டர் நாற்றங்காலில்

உள்ள தண்ணீரில் கலந்து பின்னர் ஓர் ஏக்கருக்குத் தேவையான நாற்றுகளின் வேர்களைக் குறைந்தது அரை மணி நேரம் ஊறவைத்து பின்பு நடவு செய்ய வேண்டும். நீண்ட நேரம் ஊறவைப்பதால் அதன் செயல்திறன் கூடுகிறது.

சூடோமோனாஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியா மண்ணின் மூலம் பரவும் நோய்கள், இலை மற்றும் தண்ணீர் மூலம் பரவும் பூஞ்சாண நோய்களான குலைநோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகிறது. மேலும் சூடோமோனாஸ் ஒரு பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படுவதால் பயிர்கள் செழித்து திரட்சியுடன் வளர்ந்து மகசூல் அதிகரிக்கின்றது. இத்துடன் பயிர்களில் எதிர்ப்புத் திறனைக் கூட்டி பூச்சித்தாக்குதலையும் ஓரளவு குறைக்கும்.

விதை நேர்த்தி செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை: ரசாயன பூஞ்சாண மற்றும் பூச்சிக்கொல்லிகளால் விதைநேர்த்தி செய்தால் குறைந்தது 24 மணி நேரம் இடைவெளி விட்டு பின்பு தான் உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் ரசாயன பூஞ்சாண மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை உயிர் உரங்களுடன் கலக்கக் கூடாது. விதைகளை நிழலில் மட்டுமே உலர்த்த வேண்டும்.

இத்தகைய மிக சிக்கனமான, எளிய தொழில்நுட்பமான விதை நேர்த்தி முறைகளை கடைப்பிடிப்பதன் வாயிலாக பூச்சி மற்றும் நோய்களை வரும்முன் தடுத்து அதிக மகசூல் பெற்று பயனடையலாம். ஏனெனில் நல்ல விதையும், விதை நேர்த்தியும் மட்டுமே 10 முதல் 20 சதம் வரை மகசூலை அதிகரிக்கச் செய்கின்றன.

## ஆர்.கே.பேட்டை, திருவாலங்காட்டில் 63 மில்லி மீட்டர் மழை

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை பெய்த மழையில் திருவள்ளூர் மாவட்டத்தில் பதிவான மழை அளவு: (மில்லி மீட்டரில்) ஊத்துக்கோட்டை 4, பள்ளிப்பட்டு 51, திருத்தணி 21, திருவள்ளூர் 20, பூந்தமல்லி 17, அம்பத்தூர் 3, பூண்டி 6, செம்பரம்பாக்கம் 5, சோழவரம் 2, தாமரைப்பாக்கம் 5, ஆர்.கே. பேட்டை 63, திருவாலங்காடு 63, செங்குன்றம் 6 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## நாளை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், ஆட்சியர் எ.சுந்தரவல்லி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும்.

## ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு மானியம்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் டிராக்டர் உள்ளிட்டவை வாங்கன மானியம் வழங்கப்படும் என ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக் கலை இயக்கம் சார்பில் 2015-16 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் டிராக்டர், பவர் டில்லர், வெங்காய சேமிப்புக் கிடங்கு மற்றும் பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல் ஆகியவைக்கு மானியம் வழங்கப்படுகிறது.

மானிய விவரம்:

டிராக்ரடர்- ரூ.75 ஆயிரம், பவர்டில்லர் ரூ.40 ஆயிரம், வெங்காய சேமிப்புக் கிடங்கு ரூ.87,500, மா-பழைய தோட்டங்களை புதுப்பித்தல் ரூ.20 ஆயிரம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர்களை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "நீலகிரி விவசாயிகள் பயிர் காப்பீட்டுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்

நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீட்டுக்கு முக்கியதுவம் தர வேண்டும் என உபாசியில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

கருத்தரங்கில், சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற மக்களவை உறுப்பினர் சி.கோபால கிருஷ்ணன் பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில் 85 சதவீத மக்கள் தேயிலை விவசாயத்தை நம்பியுள்ளதால் பச்சைத் தேயிலைக்கு நிரந்தர விலையும், தாற்காலிகமாக மானியமும் கிடைக்க மக்களவையில் பேசியுள்ளேன். தமிழக அரசு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சிறப்பிக்க பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து வருகிறது.

தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு பேசுகையில், நீலகிரி மாவட்டத்தில் தற்போது பருவமழை உரிய நேரத்தில் பெய்யாததால் பல்வேறு தருணங்களில் மலைத் தோட்டக் காய்கறிகளைப் பயிரிட்டுள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, மழைக் காலத்தில் நீரை குட்டைகளில் சேமிப்பது, ஓடை நீரை முறையாகப் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பல்வேறு மாற்றங்களை மத்திய அரசு மேற்கொண்டு வருவதால் விவசாயிகள் அவசியம் இந்தத் திட்டத்தில் கலந்துகொண்டு பயனுற வேண்டும் என அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். விவசாயிகளின் தோட்டங்களின் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு அதற்கான சான்றுகள் மற்றும் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கையேடுகள் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில், இயற்கை விவசாயம் சம்பந்தப்பட்ட கண்காட்சி, ஆதிவாசி மக்களின் தயாரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்க்ள் இடம்பெற்றிருந்தன.

இதில், குன்னூர் கோட்டாட்சியர் கீதா பிரியா, உபாசி தலைமை விஞ்ஞானி ராமமூர்த்தி, ஆராய்சியாளர் சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4.24, சென்னையில் ரூ.4.52.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.100, முட்டைக்கோழி கிலோ ரூ.86.

## சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மலர்களில் ஒருங்கிணைந்த பூச்சி தாக்குதல், நோய் நிர்வாகம் பற்றிய ஒரு நாள் பயிற்சி மற்றும் கலந்துரையாடல் புதன்கிழமை நடைபெற்றது. சேலம் மாவட்டத்தில் பரவலாக சுமார் 2,500 எக்டரில் மலர் சாகுபடி செய்யப்படுகிறது. மலர்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கு கைகொடுக்கும் பயிராகும். மலர்களில் மல்லிகை, ஜாதி மல்லி, காக்காட்டான், கனகாம்பரம், சம்மங்கி, சாமந்தி மற்றும் அரளி மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மலர் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் தாக்கினால் மகசூல் குறைவதோடு, தரம், நிறம் பாதிக்கப்பட்டு சந்தையில் மலர்களுக்கு குறைந்த விலையே கிடைக்கும். தற்போது மலர்கள் அறுவடை செய்யும் நேரத்தில் பூச்சி மற்றும் நோய்கள் பரவலாகத் தாக்கி வருகின்றன. அறுவடை நடைபெறும் பருவத்தில் பூச்சி, நோய் தாக்குதல் மலரில் அதிகம் தென்படுவதால், மலர் சாகுபடியாளர்களும் அவ்வப்போது வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளை தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்று வருகின்றனர்.

அனைத்து மலர் சாகுபடியாளர்களும் பயன்பெறும் வகையில் மலர் சாகுபடியில் ஒருங்கிணைந்து பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றிய ஒருநாள் பயிற்சி முகாம் விவசாயிகளுக்கு நடக்கப்பட்டது. சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் நா.ஸ்ரீராம் தலைமையில் நடைபெற்ற முகாமில் பூச்சியியல் துறை விஞ்ஞானி எம்.செந்தில்குமார் கலந்து கொண்டு மலர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல், அறிகுறிகள் மற்றும் அதனை எவ்வாறு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மூலம் கட்டுப்படுத்தலாம் என்பதை பற்றி எடுத்துரைத்தார். மலர்கள் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி தோட்டக்கலைத் துறை உதவிப் பேராசிரியர் எஸ்.ஸ்ரீவித்யா விளக்கினார். மல்லிகை, சாமந்தி, சம்மங்கி மற்றும் அரளி மலர்களில் நடைமுறையில் உள்ள புதிய

தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மலர்களை சந்தைப்படுத்துவது பற்றி, திட்ட ஒருங்கிணைப்பாளர் நா.ஸ்ரீராம் உழவர்களிடையே உரையாடினார். மேலும்,அரளி மலருக்கு தேசிய அளவில் முக்கியதுவம் கொடுப்பது பற்றியும் உரையாடினார். மலர் சாகுபடியாளர்களுடன் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் உரையாடி, சந்தேகங்கள், கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

## பேராவூரணிக்கு ரூ. 15.27 லட்சம் குறுவை தொகுப்புத் திட்டம்

பேராவூரணி வேளாண்மை கோட்டத்திற்கு குறுவை தொகுப்பு திட்டத்தில் ரூ. 15.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பேராவூரணி வட்டாரத்தில் வழக்கமாக ஜூன் 12-ல் தண்ணீர் திறந்துவிடப்பட்டால், சுமார் 500 ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும். தற்போது, மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததால், குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், ரூ. 15.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து குறுவை சாகுபடி பரப்பை அதிகப்படுத்த தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இக்குறுவை சாகுபடி திட்டத்தின் கீழ், இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் பின்னேற்பு மானியமாக அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்க 310 ஏக்கர் இலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 100 ஏக்கருக்கு நெல் நுண்ணூட்டமும், 250 ஏக்கருக்கு சிங்சல்பேட் நுண்ணூட்ட உரமும் இலவசமாக பேராவூரணி வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும்.

குறுவை சாகுபடி மேற்கொள்ள இயலாத விவசாயிகளுக்கு சுமார் 50 ஏக்கருக்கு உளுந்து விதை 8 கிலோ ரூ. 900 மானியத்தில் வழங்கப்படும். கோடை உழவு செய்து விதைக்கப்படும் உளுந்து விதையை மடக்கி

உழுது மண்ணின் தரம் உயர்த்த ஏக்கருக்கு பின்னேற்பு மானியம் ரூ. 500 வழங்கப்படும்.

## "மா அடர்வு தொழில்நுட்பத்தில் 40% கூடுதல் லாபம்'

மா அடர்வு தொழில்நுட்ப முறையைப் பின்பற்றினால் 40 சதவீதம் கூடுதல் லாபம் பெற வாய்ப்புள்ளது என்று நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தெரிவித்தார்.

நாகை மாவட்டத்தில் வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும் வேளாண் வளர்ச்சிப் பணிகளை ஆட்சியர் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மயிலாடுதுறை வேளாண் கோட்டம், பட்டமங்கலம் கிராமத்தில் தமிழரசன் என்பவரது வயலில் நடைபெற்ற இயந்திர நெல் நடவுப் பணியைப் பார்வையிட்ட ஆட்சியர், 100 கிலோ விலையில்லா நெல் நுண்ணூட்டக் கலவையை வயலின் உரிமையாளரிடம் வழங்கினார்.

குளிச்சார் கிராமத்தில் பத்மநாபன் என்பவரது தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த மா அடர்வு நடவு முறை வேளாண்மையை ஆட்சியர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அப்போது, மா அடர்வு நடவு முறையில் ஒரு ஹெக்டேருக்கு 400 மரக்கன்றுகள் நடப்படுகின்றன. சாதாரண நடவு முறையில், 100 கன்றுகள் மட்டுமே நடவு செய்யப்பட முடியும் என்ற இடத்தில், மா அடர்வு நடவு முறையில் 400 மரக்கன்றுகள் நடவு செய்ய முடியும்.

மேலும், இந்த முறையில் இளம் கன்று பராமரிப்பு மற்றும் கவாத்து மூலம் கிளைகளின் வளர்ச்சி, வேரின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு 40 சதவீதம் முதல் அதிக லாபம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, மா அடர்வு நடவு முறைக்கு தோட்டக்கலை விவசாயிகள் முனைப்புக் காட்டலாம் என்றார் ஆட்சியர்.

இதைத் தொடர்ந்து, சீர்காழி பகுதியில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர், தென்னலக்குடியைச் சேர்ந்த விவசாயி பூ. ராமசாமி என்பவருக்கு குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ், ஒரு ஏக்கருக்கு 8 கிலோ வீதம்

உளுந்து விதைகளையும், 20 விவசாயிகளுக்கு நெல் நுண்ணூட்டக் கலவைகளையும் ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக, திருக்கடையூர் விதைப் பண்ணையில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு மேற்கொள்ள வேண்டிய கட்டமைப்புகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கினார்.

வேளாண் இணை இயக்குநர் ஜெ. சேகர், மயிலாடுதுறை வருவாய்க் கோட்டாட்சியர் சுபா நந்தினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சண்முகம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் விஜயகுமார், உதவி இயக்குநர்கள் மோகன்தாஸ், சந்திரஹாசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆகாயத்தாமரை தரும் பாதிப்பு**

மழைக்காலத்தில் ஆற்றின் போக்கை தடுக்கும் வகையில் வளரும் ஆகாயத் தாமரை, சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன. பல இடங்களில் தரைப்பாலங்கள் மூழ்குவதற்கு இவை காரணமாக உள்ளது. ஆகாயத் தாமரையின் ஒரு விதையில் இருந்து 10 ஆயிரம் செடிகள் வளர்கின்றன. இதிலிருந்து இதன் விரைந்து பரவும் தன்மையை அறியலாம். நீர்நிலைகளில் உள்ள உயிரினங்களுக்கு ஆக்சிஜன் பற்றாக்குறையை இவை ஏற்படுத்துகின்றன. நீரின் வெப்பத்தை இவை குறைத்து கொசுக்களின் உற்பத்தியை அதிகரிக்கின்றன. கொசுக்களை கொல்லும் மீன்களையும்இவை அழிக்கின்றன. ஆகாயத் தாமரையின் வாழ்நாள் 20 வருடங்கள் என்பதால், அழிக்காவிட்டால் தொடர் பிரச்னையை ஏற்படுத்தும்..

## கோபியில் அரை மணி நேர பலத்த மழையால் மகிழ்ச்சி

கோபி: கோபி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று மாலை அரை மணி நேரம் பலத்த மழை பெய்த்து.கோபியை சுற்றியுள்ள கரட்டூர், பாரியூர்ரோடு, மேட்டுவலவு, முருகன்புதூர், மொடச்சூர், வேட்டைக்காரன் கோவில், கொளப்பலூர், கச்சேரிமேடு, கரட்டடிபாளையம் மற்றும் சத்தியமங்கலம் சாலை வரை நேற்று மாலை, 4 மணிக்கு பலத்த மழை பெய்தது. இதனால் கரட்டூர் ஆர்ச் முதல் கரட்டடிபாளையம் வரை சாலையில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. கீரிப்பள்ளம் ஓடையை ஆக்கிரமித்திருந்த, ஆகாயத்தாமரை மழையில் அடித்து சென்றது. அரை மணி நேரம் பெய்த மழை, தூரலுடன் மாலை, 4.30 மணிக்கு நின்றது. கோபி சுற்றுவட்டார பகுதியில், பெரிய அளவில் மழைச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. சூடு தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கால்நடை பல்கலையில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

ஈரோடு: ஈரோடு, கால்நடை பல் கலைக்கழக மையத்தில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்றனர். ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் இயங்கி வரும் கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கறவை மாடு வளர்ப்பு பயிற்சி, கடந்த இரு நாட்களாக நடந்தது. இதில் ஈரோடு, நசியனூர், சத்தியமங்கலம், வெள்ளோடு, சென்னிமலை, புங்கம்பாடி, அரியப்பம்பாளையம் முதலான பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கறவை மாடுகளை தேர்ந்தெடுப்பது, கொட்டகை அமைப்பது, தீவனம் அளிப்பது, இனப்பெருக்கம், நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பது குறித்து இதில் பயிற்சி அளிக்கப்பட்டது. பல்கலைகழக தலைவர் யசோதை, உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், கவிதா ஆகியோர் பயற்சியளித்தனர்.

## மானிய விதை வினியோகம்: விவசாயிகள் பயன்பெற அழைப்பு

ஊட்டி: மானிய விதைகளை வாங்கி, சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டி கலெக்டர் அலுவலக அரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன் தலைமை வகித்தார். விவசாயம் சார்ந்த, 50 கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டன.

'ஊட்டி, குன்னூர், கோத்தகிரி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில், இந்திய-ஜெர்மானிய முகவை சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் கேரட், பீட்ரூட், முட்டை கோஸ் மற்றும் பீன்ஸ் விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதனை வாங்கி விவசாயிகள் பயன்பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

'ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ், விசை, கைத் தெளிப்பான் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, தோட்டக்கலை துறை மூலம் தெரிவிக்கப்பட்டது.

வனத்துறையினர் கூறுகையில், '2015--16, தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ், தனியார் பட்டா நிலங்களில், மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பொருட்டு, 5,000 சில்வர் ஓக் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மரக்கன்றுகள், பயனாளிகளால் நன்கு பராமரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு பின், நன்கு வளர்ந்த செடிகளின் அடிப்படையில், ஊக்கத் தொகை வழங்கப்படும்' என்றனர்.

'நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க அலுவலகத்தில், கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணி, இம்மாத இறுதிக்குள் நிறைவு பெறும்' என, தெரிவிக்கப்பட்டது.

'தாம்பட்டியில் இருந்து காட்டேரி டேம் வரை உள்ள, ஓடைகளை துார்வாரும் பணி, நீலகிரி எம்.பி., தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது; பணி, விரைவில் நிறைவு பெறும்' என, வேளாண்மை பொறியியல் துறையினர் தெரிவித்தனர்.

**ஆண்டிபட்டியில் பப்பாளி விலை உயர்வு**

ஆண்டிபட்டி,,:பப்பாளி விலை உயர்ந்துள்ளதால் ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனுார், டி.பொம்மிநாயக்கன்பட்டி உட்பட சில கிராமங்களில் பப்பாளி சாகுபடி உள்ளது. சில ஆண்டுக்கு முன்பு இப்பகுதியில் நுாறு ஏக்கருக்கும் அதிகமாக இருந்த பப்பாளி சாகுபடி படிப்படியாக குறைந்து தற்போது 20 ஏக்கர் அளவில் குறைந்து விட்டது. வறட்சி, நோய் தாக்கம் இவற்றால் பாதிப்படைந்த விவசாயிகள் பப்பாளி சாகுபடியை தவிர்த்து விட்டனர். கடந்த சில மாதங்களாக பப்பாளிக்கான விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை மட்டுமே இருந்தது. தற்போது கிலோ ரூ.12 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகள் தெரிவித்ததாவது: தர்பூசணி வரத்து அதிகமானால் பப்பாளி விலை குறைந்து விடும். ஒவ்வொரு ஆண்டும் ரம்ஜான் மாதத்தில் பப்பாளிக்கான விலை கூடுதலாக கிடைக்கும். தற்போது ஆண்டிபட்டி பகுதியில் விளைச்சல் மிக குறைவாக உள்ளது. இருப்பினும் பப்பாளிக்கான கொள்முதல் விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது என தெரிவித்தனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

தேவாரம்,,:டி.சிந்தலைச்சேரி பென்னிகுவிக் வளாகத்தில் பதினெட்டாம் கால்வாய் விவசாயிகள் சங்க கூட்டம், தலைவர் ராமராஜ் தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் காளிமுத்து முன்னிலை வகித்தார். செயலாளர் திருப்பதி, நிர்வாகிகள் தங்கராஜ், தேவராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம்: பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக தமிழக நதிகளை இணைப்பது, பருவமழை மற்றும் இயற்கைக்கு எதிராக உள்ள சீமைகருவேலம், சாலி உள்ளிட்ட முள்வகை மரங்களை அப்புறப்படுத்தி பலன் தரும் புங்கன், வேம்பு, பூவரசு உள்ளிட்ட மரங்களை நடவு செய்வது, குளம் மற்றும் கண்மாய்களில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவது, முல்லை பெரியாறு

அணையின் நீர் மட்டத்தை 152 ஆக உயர்த்துவது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆறு இடங்களில் தயாராகும் 11.54 லட்சம் மரக்கன்றுகள்**

ராமநாதபுரம்,: ராமநாதபுரம் மாவட்டத்தில் மரங்கள், மலைப்பகுதிகள் குறைவு. இதனால் மாவட்டத்தில் மழையளவும் குறைவு. எனவே, மரம் வளர்த்து மழை பெறும் முயற்சியாக வரும் நவம்பர், டிசம்பரில் மழைக்காலங்களில் மாவட்ட நிர்வாகம் சார்பில், தீவிர மரம் நடுதல் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக வனத்துறை மூலம் ஊரக வளர்ச்சித்துறை நிதியுதவியுடன் கமுதக்குடி சரகத்தில் 78 ஆயிரத்து 640 மரக்கன்றுகள், மாரியூர் சரகத்தில் 50 ஆயிரத்து 600, தங்கச்சிமடத்தில் 55 ஆயிரம், ஆற்றாங்கரையில் 70 ஆயிரத்து 180 மரக்கன்றுகள் என 2 லட்சத்து 54 ஆயிரத்து 420 மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. மேலும், ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுந்தரமுடையான் அரசு மாதிரி தோட்டக்கலை பண்ணையில் 2 லட்சம் மரக்கன்றுகளும், கீழநாகாச்சி அரசு மாதிரி தோட்டக்கலை பண்ணையில் 7 லட்சம் மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில், 2 லட்சம் புங்கன், 2 லட்சம் துாங்குமூஞ்சி வாகை, 2 லட்சம் அயல் வாகை, 2 லட்சம் நீர் மருது மரக்கன்றுகளும், 50 ஆயிரம் சவுக்கு, 25 ஆயிரம் தேக்கு, 25 ஆயிரம் வேப்ப மரக்கன்றுகள் அடங்கும். இம்மரக்கன்றுகளை வளர்த்து பராமரிக்கும் பணியில் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மண் கலவையை பைகளில் நிரப்புவது, நாற்று நடவு, கன்றுகளுக்கு நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். ஒருவருக்கு தலா ரூ.200 சம்பளம் வழங்கப்படுகிறது.

நேற்று இந்த பண்ணைகளை செய்தியாளர்களுடன் பார்வையிட்ட கலெக்டர் நடராஜன் கூறியதாவது: நடப்பு ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தை பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் இந்த 11 லட்சத்து 54 ஆயிரத்து 420 மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. அரசு பொது இடங்கள், சாலையோரங்கள், நீர்நிலைகளில் கரையோரங்கள், அரசு அலுவலக

வளாகங்கள் என பொது இடங்களில் மரக்கன்றுகள் நடப்படும், என்றார். மாவட்ட திட்ட இயக்குனர் பழனி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராமசாமி, தோட்டக்கலை உதவி இயக்குனர் நாகராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரவள்ளி பயிரில் வெள்ளை நோய் தாக்குதல்

சங்கராபுரம், : சங்கராபுரம் மற்றும் மலை பகுதிகளான சேராப்பட்டு, புளியங்கோட்டை, ஆனைமடுவு, புதுப்பட்டு, புத்திராம்பட்டு, ரங்கப்பனூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இதில் கரும்பு, நெல், மக்காச்சோளம், எள், கேழ்வரகு உள்ளிட்ட பயிர்களை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். இந்த நிலையில் மலை கிராமங்களான சேராப்பட்டு, வஞ்சிகுழி, ஆனைமடுவு உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நூற்றுக்கணக்கான பரப்பளவில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டு வருகின்றனர்.

இந்த பயிர்களை வெள்ளை நோய் தாக்கப்படுவதால் வளர்ச்சி இல்லாமல் இருந்து வருகின்றது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுபற்றி விவசாயி ஒருவரிடம் கேட்டபோது, கடந்த மாதம் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டது. அன்று முதல் தற்போது வரை பயிரிடப்பட்ட மரவள்ளி பயிர்களை தண்ணீர் பாய்ச்சி களை எடுத்து பராமரித்து வருகிறோம். இந்த நிலையில் தற்போது ஏற்படும் வெள்ளை நோயினால் செடிகளின் வளர்ச்சி குறைவாக உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அரசு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

**ஏற்காடு, கொளத்தூர் உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக மழை விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியது**

ஏற்காடு : சேலம் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. ஏற்காட்டில் சுமார் ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்ததால் ஜில் க்ளைமேட் நிலவியது. தமிழகத்தில் நடப்பாண்டு கடந்த இரு வாரங்களுக்கு முன்பு தென்மேற்கு பருவமழை தொடங்கியது. மாநிலத்தின் ஒருசில பகுதிகளில் மட்டும் லேசான மழை பெய்த நிலையில், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தியது. வெப்ப தாக்கத்தால் பொதுமக்கள் கடும் அவதிகுள்ளாகி வந்தனர்.

இந்நிலையில், சேலம் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. ஆத்தூர், தலைவாசல் பகுதியில் காலை முதல் வெயில் சற்று அதிகரித்து காணப்பட்ட நிலையில், மாலை வேளையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. 5.30 மணியளவில் திடீரென மழை பெய்தது. இதேபோல், கெங்கவல்லி, தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, நாகியம்பட்டி, உலிபுரம் உள்ளிட்ட இடங்களிலும் நல்ல தூறல் மழை பெய்தது. வாழப்பாடி பகுதியில் மாலை வேளையில் பெய்த மழையால் குளிர்ச்சியான சீதோஷ்ணநிலை காணப்பட்டது.

ஏற்காட்டில் கடந்த ஒரு வாரமாகவே மாலை வேளையில் மழை பெய்து வருகிறது. நேற்று பகல் நேரத்தில் வழக்கம்போல் வானம் மேகமூட்டத்துடுன் காணப்பட்டது. மாலை 5.10 மணி முதல் மழை பெய்யத் தொடங்கியது. இதனால், இரவு நேரத்தில் குளிர் வாட்டி எடுத்தது. சேலம் மாநகர பகுதியில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. இதனால் பள்ளி மற்றும் கல்லூரிகளிலிருந்து திரும்பிய மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தவாறே வீடு வந்து சேர்ந்தனர். அலுவலகங்களிலிருந்து வீடு திரும்புவதற்கு சற்று தாமதம் ஏற்பட்டது. இளம்பிள்ளை பகுதியில் லேசான தூறல் மழை பெய்தது. இதனால், ஜில் க்ளைமேட் நிலவியது.

இடைப்பாடி பகுதியில் வானம் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஆனால், மழை வராமல் பொதுமக்களை ஏமாற்றியது. ஜலகண்டாபுரம் மற்றும் நங்கவள்ளி உள்ளிட்ட இடங்களில் லேசான தூறல் மழை பெய்தது. தமிழக- கர்நாடக எல்லை பகுதியில் நேற்று மாலை நல்ல மழை பெய்தது. மேட்டூர், கோட்டையூர், கொளத்தூர், கோவிந்தப்பாடி மற்றும் காவேரிபுரம் உள்ளிட்ட இடங்களில் பெய்த மழையால் விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியது. நீர்பிடிப்பு பகுதியான இந்த கிராமங்களில் பெய்த மழையால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆக மொத்தம் இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நாமகிரிப்பேட்டை கூட்டுறவு நிலையத்தில் ரூ.70 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை கூட்டுறவு ஏல மையத்தில் வாரந்தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கும். இந்த வாரம் நடந்த ஏலத்தில், விரலி ரக மஞ்சள் 870 மூட்டை, உருண்டை ரக மஞ்சள் 400 மூட்டை, பனங்காளி 50 மூட்டை என மொத்தம் 1,320 மஞ்சள் மூட்டை விற்பனைக்கு வந்தது. இதில் விரலி ரகம் குறைந்தபட்சமாக ரூ. 8 ஆயிரத்து 201 முதல் அதிகபட்சமாக ரூ.10 ஆயிரத்து 409 வரை ஏலம் போனது.

உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.7 ஆயிரத்து 112 முதல் அதிக பட்சமாக ரூ.9 ஆயிரத்து 209 வரை ஏலம் போனது. பனங்காளி ரகம் குறைந்தபட்சமாக 11 ஆயிரத்து 500க்கும், அதிகபட்சமாக 21 ஆயிரத்து 500க்கும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் ரூ. 70 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் நடந்தது.

## ஒரே நாளில் 400 டன் வரத்து ராயக்கோட்டை மார்க்கெட்டில் தக்காளி விலை கிலோ ரூ.14 ஆக சரிவு

ராயக்கோட்டை : ராயக்கோட்டை தக்காளி மார்கெட்டிற்கு நேற்று ஒரே நாளில் 400 டன் தக்காளி விற்பனைக்கு வந்து குவிந்தது. வரத்து

அதிகரித்ததால் தக்காளி விலை கிலோ ரூ.14 ஆக சரிந்தது. தமிழகத்தில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம் பல்லடம், திண்டுக்கல், மணப்பாறை, தர்மபுரி, ஓசூர் மற்றம் ராயக்கோட்டை ஆகிய பகுதிகளில் அதிகளவில் தக்காளி விளைவிக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் தக்காளிக்கு மார்க்கெட் அமைந்துள்ளது. இங்கு சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்படும் தக்காளி, நாள்தோறும் 80 முதல், 120 டன் வரை விற்பனைக்கு கொண்டுவரப்படும். சீசனில் 200 டன் தக்காளி வரை விற்பனைக்கு வருவது வழக்கம்.

இந்நிலையில் தமிழகத்தில் கோடையில் கடும் வறட்சி, தொடர்ந்து பெய்த மழையால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ராயக்கோட்டை மார்க்கெட்டில் தக்காளி மொத்த விலையில் கிலோ ரூ.65க்கு விற்பனையானது. வரத்து 60 டன்னாக குறைந்ததால், தேவை அதிகரித்த விலையேற்றம் காணப்பட்டது. இதனால், சென்னையில் தக்காளி கிலோ ரூ.100க்கும், பிற மாவட்டங்களில் கிலோ ரூ.80 வரையும் தக்காளி விற்பனை செய்யப்பட்டது.

கடந்தவாரம் வரை ராயக்கோட்டை மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.65க்கு விற்கப்பட்டது, நேற்று திடீர் சரிவு ஏற்பட்டு ஒரு கிலோ தக்காளி ரூ.14க்கு விற்பனை செய்யப்பட்டது. மார்க்கெட்டில் ரூ. 7 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. இதுகுறித்து தக்காளி விவசாயிகள் கூறுகையில், 'ராயக்கோட்டை சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள் அதிகளவில் தக்காளி பயிரிட்டுள்ளனர். வறட்சி, மழையால் விளைச்சல் பாதித்த வரத்து குறைந்ததால், கடந்த வாரம் மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.65க்கு விற்பனை செய்யப்பட்டது.

25 கிலோ பெட்டி ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரம் வரை விற்கப்பட்டது. ஆனால், தற்போது தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால், வரத்து மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் மார்க்கெட்டிற்கு 400 டன் தக்காளி (20 ஆயிரம் பெட்டிகள்) விற்பனைக்கு வந்து குவிந்தது.

வரத்து அதிகரித்தால் ரூ.3 ஆயிரத்துக்கு விற்ற ஒரு பெட்டி தக்காளி நேற்று, ரூ.350 முதல் 400 ரூபாய் வரை விற்பனையானது. ஒரு கிலோ ரூ.14க்கு மட்டும் விற்பனை செய்யப்பட்டது.

**வத்தல்மலை பாதையில் பலாப்பழம் விளைச்சல் அதிகரிப்பு**

தர்மபுரி : வத்தல்மலை பாதையில் பலாப்பழம் விளைச்சல் அதிகரித்து வியாபாரம் துவங்கியதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம், வத்தல் மலையில் பால்சிலம்பு, பெரியூர், மன்னாங்காடு உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் 3 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர்.

வத்தல் மலையில் காப்பி, செவந்தி பூ உள்ளிட்ட பூ வகைகள் மற்றும் சில்வர் ஓக் மரங்கள், தோட்டப்பயிர்கள், குச்சி கிழங்கு, சாமை, தினை, கேழ்வரகு போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றது. விளைவிக்கப்படும் பயிர்களை மலையில் இருந்து தர்மபுரிக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில் வத்தல்மலையில் நாய்க்கனூர் பகுதியில் பலா மரங்களில் காய்கள் விளைச்சல் அதிகமாக உள்ளது. இவற்றை வாங்க, தர்மபுரியில் இருந்து வத்தல் மலைக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் பலாபழங்களை வாங்கி செல்கின்றனர். இது குறித்து பலா விவசாயிகள் கூறுகையில், வத்தல்மலையில் பலா பழம் விளைச்சலுக்கு ஏற்ற சீதோஷ்ணநிலை உள்ளது. இங்கு நாய்க்கனூர், பால்சிலம்பு, பெரியூர் ஆகிய இடங்களில் பலா மரங்கள் அதிகம் வளர்க்கப்படுகின்றன.

தற்போது பலா சீசன் என்பதால் ஒவ்வொரு மரத்திலும் 20க்கும் மேற்பட்ட காய்கள் விளைந்துள்ளன. இவை ரூ.50 முதல் ரூ.150 வரை அளவுக்கு ஏற்ப விற்பனை செய்து வருகிறோம். தர்மபுரியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் தேடி வந்து பலா பழங்களை வாங்கி செல்வதால் எங்களுக்கு, தர்மபுரி டவுனுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் பயண செலவு இல்லை.

இதனால் பலாபழத்தை குறைந்த விலைக்கே விற்பனை செய்கிறோம். பலாப்பழம் விளைவதற்கு ஏற்ற சீதோஷ்ணநிலையும், மக்களின் ஆர்வமும் இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் பலரும் தங்களது விளைநிலங்களில் பலா மரக்கன்றுகளை ஆர்வத்துடன் நடவு செய்து வருகின்றனர் என்றனர்.

## வேளாண் குறைதீர்க்கும் கூட்டம்

ஈரோடு, : ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான வேளாண் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 24ம் தேதி காலை 11 மணிக்கு ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.2 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று ரூ.2 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 104 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,310 முதல் ரூ.6,020 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 4,280 முதல் ரூ. 4,850 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,100 முதல் ரூ.4,200 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 3 வியாபாரிகளும், 35 விவசாயிகளும் பங்கேற்றனர்.

## அவிநாசியில் ரூ.10.45 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசியில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் ரூ.10.45 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று

நடைபெற்ற ஏலத்தில் 500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில், ஆர்.சி.எச் ரகம் குவிண்டால் ரூ.5,000 முதல் ரூ.5,760 வரையிலும், டி.சி.எச். ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.6,705 வரையிலும், மட்ட ரகம் ரூ.1,000 முதல் ரூ.1,550 வரையிலும் ஏலம் கோரினர்.

மொத்தம் ரூ.10.45 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.இந்த ஏலத்தில் திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், கோபி, நிச்சாம்பாளையம், கிணத்துக்கடவு, தர்மபுரி, திருப்பத்தூர், திங்களூர், பென்னாகரம், கோபி, நம்பியூர், அன்னூர் பகுதிகளிலிருந்து 71 விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 7 வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்றனர். வரும் வாரங்களில் கோடை பருவ பருத்தி வரத்து கூடுதலாக இருக்கலாம் என கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## ஊட்டி மரவியல் பூங்காவில் மலர்செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி மும்முரம்



ஊட்டி,

ஊட்டி மரவியல் பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>சுற்றுலா பயணிகள்</u>

மலைகளின் அரசி என்று வர்ணிக்கப்படும் நீலகிரி மாவட்டம் சர்வதேச அளவில் சிறந்த கோடை வாச சுற்றுலா இடமாக திகழ்ந்து வருகிறது. ஊட்டியில் வருடந்தோறும் மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலம் ஆகும். இந்த சீசன் காலத்தில் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருகின்றனர்.

2–வது சீசன் அக்டோபர், நவம்பர் மாதங்களாகும். நவம்பர், டிசம்பர் மாதம் பனி குளிர் சீசன் ஆகும். இது போன்ற சீசன் காலத்தை அனுபவிக்க நீலகிரி மாவட்டத்திற்கு ஆண்டுக்கு 22 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். இதன் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

<u>மரவியல் பூங்கா</u>

ஊட்டி படகு இல்லம் அருகே மரவியல் பூங்கா உள்ளது. இங்கு இமயமலையில் இருந்து கொண்டு வரப்பட்டு பல்வேறு வகையான மரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இதுதவிர கிரிக்கெட் தயாரிக்க பயன்படுத்தப்படும் 'வில்லோ' மரங்கள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கண்களை கவரும் பசுமை நிறைந்த புல்வெளியை கொண்ட இந்த பூங்காவில் கடந்த கோடை சீசனுக்காக பிரஞ்மேரி கோல்டு, சால்வியா, இன்கா மேரிகோல்டு, பிளாக்ஸ், பிகோனியா உள்ளிட்ட பல்வேறு ரகங்களை கொண்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன.

கடந்த மே மாதம் இந்த செடிகளில் பூத்து குலுங்கிய மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து சென்றனர். தற்போது கோடை சீசன் முடிந்து உள்ள நிலையில் மலர் செடிகளும் பூத்து ஓய்ந்து விட்டன.

<u>விதைகள் சேகரிப்பு</u>

இந்த மலர் செடிகளில் இருந்து 2–வது சீசனுக்கு தேவையான விதைகளை சேகரிக்கும் பணியில் ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இங்கு சேகரிக்கப்படும் விதைகள் அனைத்தும் தாவரவியல் பூங்கா அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு, அங்குள்ள விற்பனை நிலையம் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

இதுகுறித்து பூங்கா அதிகாரிகள் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் இன்னும் ஓரிரு மாதங்களில் 2–வது சீசன் தொடங்க உள்ளது. எனவே மரவியல் பூங்காவில் நடவு செய்யப்பட்டு உள்ள மலர்செடிகள் அனைத்தும் விரைவில் அகற்றப்பட்டு, புதிய மலர் செடிகள் நடவு செய்யப்படும் என்றனர்.

## 41–வது மலர் கண்காட்சி: ஏற்காட்டில் மலை ஏறுதல் போட்டி 25–ந் தேதி நடக்கிறது



சேலம்,
சேலம் விளையாட்டு மற்றும் இளைஞர்நல அலுவலர் பெரியகருப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

41–வது கோடை விழா மலர் கண்காட்சி வருகிற 25–ந் தேதி (சனிக்கிழமை) முதல் 26–ந் (ஞாயிற்றுக்கிழமை) தேதி வரை சேலம் மாவட்டம் ஏற்காட்டில் நடைபெறவுள்ளது. விழாவை முன்னிட்டு 25–ந் தேதி ஏற்காடு அடிவாரத்தில் இருந்து மலை ஏறுதல் போட்டி நடக்கிறது. இந்த போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் வீரர், வீராங்கனைகள் 25–ந் தேதி காலை 6 மணியளவில் ஏற்காடு அடிவாரத்தில் உள்ள காபி போர்டு அருகில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டு ஆஜராக வேண்டும். இப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## சிவகங்கை உள்பட 9 ஒன்றியங்களில் வேளாண் எந்திரங்கள் சேவை மையம் அமைக்க விண்ணப்பிக்கலாம் கலெக்டர் மலர்விழி தகவல்



சிவகங்கை உள்பட 9 ஒன்றியங்களில் வேளாண் எந்திரங்கள் சேவை மையம் அமைக்க விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் மலர்விழி தெரிவித்துள்ளார்

சேவை மையம்

சிவகங்கை மாவட்ட கலெக்டர் மலர்விழி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை எந்திரமயமாக்கல் துணைத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தலா ஒரு சேவை மையம் அமைக்க அரசாணை வழங்கப்பட்டுஉள்ளது. இந்த சேவை மையங்களின் மூலம் அந்தந்த வட்டார அளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களுக்குத் தேவையான வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் எந்திரங்களின் தொகுப்பினை விவசாய குழு அல்லது

நிறுவனத்துக்கு வேளாண் எந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படும்.

இந்த சேவை மையங்களை முன்னோடி விவசாயி அல்லது விவசாய குழுக்கள் வேளாண் பொறியியல் துறையின் வழிகாட்டுதலுடன் தங்கள் பொறுப்பில் அமைத்துக் கொள்ளலாம். மேற்கண்ட சேவை மையங்களில் அந்தந்த பகுதியில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களுக்கு தேவையான எந்திரங்களை குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக ரூ.25லட்சம் மதிப்புள்ள எந்திரங்களை வாங்கவும், எந்திரத்தின் மதிப்பீட்டில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 லட்சம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. எனவே அரசு மானியத் தொகை ரூ.10 லட்சம் போக மீதம் உள்ள பங்களிப்பு தொகையான ரூ.15 லட்சத்தினை முதலீடு செய்தால் மட்டும் போதுமானதாகும். இதன் முதற்கட்டமாக ஏற்கனவே 2015-16-ம் ஆண்டில் சாக்கோட்டை, தேவகோட்டை மற்றும் கண்ணங்குடி ஆகிய ஒன்றியங்களில் வேளாண் எந்திரங்கள் வாடகை சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9 ஒன்றியங்கள்

நடப்பு நிதியாண்டில் மாவட்டத்தில் சிவகங்கை, காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், கல்லல், சிங்கம்புணரி, திருப்பத்தூர் மற்றும் எஸ்.புதூர் ஆகிய 9 ஒன்றியங்களில் வேளாண் எந்திரங்கள் சேவை மையம் அமைக்கப்பட உள்ளது. மேற்கண்ட மானிய திட்டத்தின் மூலம் சேவை மையம் அமைக்க விரும்பும் முன்னோடி விவசாயிகள், விவசாய குழுக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இந்த விண்ணப்பங்கள் வேளாண்மை எந்திரமயமாக்கல் துணைத் திட்ட குழுவின் மூலம் தேர்வு செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது குறித்த விவரங்களுக்கு செயற் பொறியாளர், (வேளாண்மை பொறுப்பு), வேளாண்மைப் பொறியியல் துறை, சிவகங்கை மாவட்ட கலெக்டர் வளாகம், தொலைபேசி எண் 04575-240213 உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறுப்பு), வேளாண்மை பொறியியல்

துறை, தொண்டி ரோடு, சிவகங்கை. தொலைபேசி எண் 04575-240288, உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறுப்பு), வேளாண்மைப் பொறியியல் துறை, புகழேந்தி தெரு, சூடாமணிபுரம், காரைக்குடி ஆகிய முகவரியில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களை அணுகி பயன் அடையலாம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.